# இயேசு ஊழியங்கள்



**105/229, எம்.டி.எச் ரோடு, வில்லிவாக்கம், சென்னை – 600 049**

**போன் : 9003009752**

**ஈமெயில்: beten.yatsar@angeltv.org  இணையதளம்: www.jesusministries.org**


கிறுஸ்துவுக்குள் பிரியமான அன்பு மகளே...

அதிசீக்கிரமாக வரபோகும் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். ஒவ்வொரு மாதமும் இந்த கடிதங்கள் மூலமாக உங்களை சந்திப்பதில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி. தேவன் நம்மை படைத்ததற்கு காரணம் நாம் அவருடைய சித்தத்தை செய்வதற்காக தான். நம்முடைய வாழ்கையில் தேவனுடைய சித்தமில்லாமல் ஒரு அனுவும் அசையாது. பாருங்கள் நீங்கள் இந்த **பெட்டன் யாட்சார் கிளப்** ல் இணைந்திருப்பதும் தேவனுடைய பரம சித்தமாயிருக்கிறது. காரணம் இந்த கடைசி நாட்களில் கர்த்தருக்கென்று ஒரு கூட்ட சேனை எழும்பபோகிறார்கள். அது நீங்களும் நானும் மட்டும் அல்ல உங்கள் கருவில் பிறக்கின்ற ஒவ்வொரு குழந்தைகளும் தான். நான் அடிக்கடி சொல்வது போல நீங்கள் சுமந்துகொண்டிருப்பது சாதாரணமான குழந்தை அல்ல அவர்கள் கர்த்தரின் சேனை வீரர்கள். கர்த்தருக்காக மிக வைராக்கியமாக எழும்பப்போகும் கடைசி கால தீர்க்கதரிசிகள் கர்த்தருடைய வாயாக இருந்து அநேக அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்யபோகும் பரிசுத்த சந்ததிகள்.

கடைசிகால தலைமுறைகளாகிய உங்கள் பிள்ளைகள் தான் நம்முடைய பரம எதிரியான சாத்தானை எதிர்த்து யுத்தம் செய்யபோகிறவர்கள். குழந்தைகள் எப்படி பிசாசை எதிர்த்து யுத்தம் செய்யமுடியும்? என்ற நீங்கள் கேட்கலாம் வேதம் சொல்லுகிறது சங்கீதம் 8:2 ல் “ **பகைஞனையும் பழிகாரனையும் அடக்கிபோட தேவரீர் உம்முடைய சத்துருக்களினிமித்தம் குழந்தைகள் பாலகர் வாயினால் பெலன் உண்டுபண்ணினீர்**”.பாருங்கள் கர்த்தர் பாலகர்கள் வாயில் சாத்தானை ஜெயிக்கிற பெலனை வைத்திருக்கிறார். அப்படியானால் பாலகர்கள் நாவை பட்டயமாக மாற்றி அவர்கள் வாயிலிருந்து புறப்படுகிற வார்தைகளினால் சாத்தனை ஜெயிக்கபோகிறார்கள். இந்த கடைசி நாட்களிலே கருவில் வளர்ந்துகொண்டிருக்கிற உங்கள் குழந்தை தான் பிசாசை ஜெயிக்கபோகிறார்கள். இந்த வார்த்தைகளை கேட்கும்போதே எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறதல்லவா? இப்படிபட்ட வல்லமை உங்கள் குழந்தை பெற்றுகொள்ள வேண்டுமென்றால் இந்த கர்ப்பகாலத்திலே இந்த வல்லமையை பெற்றுகொள்ள நீங்கள் பிரயாசப்படுங்கள். அதற்கு நீங்கள் கர்த்தருடைய காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும்.

என் அன்பு மகளே உங்கள் பிள்ளைகளை நீங்கள் தேவனுக்கேற்ற பக்தியில் வளர்க்கவேண்டும் தேவ சத்தத்தை கேட்டு தேவ சித்தத்தை செய்கின்ற குழந்தையாக வளர்க்கவேண்டியது உங்களது கடமை. உங்கள் கர்ப்ப காலங்கள் முழுவதும் உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களை பத்திரமாக பாதுகாத்து சுகபிரசவத்தில் குழந்தையை பெற்றெடுக்க உதவிசெய்வாராக!

கர்த்தர் தாமே உங்களையும் உங்கள குழந்தையையும் ஆசீர்வதிப்பாராக!

மேலும் ஜெப உதவிக்கு எங்கள் ஜெபவீரர்களை தொடர்புக்கொள்ளுங்கள் : 044-4050 0011

அன்புடன்

சாது சுந்தர் செல்வராஜ்

குறிப்பு: உங்கள் ஏஞ்சல் டிவியில் **பெட்டன் யாட்சார்** நிகழ்ச்சி ஒவ்வொரு புதன் கிழமை மதியம் 3 மணிக்கும், அதன் மறுஒளிபரப்பு ஞாயிற்றுக் கிழமை மாலை 5:30 மணிக்கும் ஒளிபரப்பாகும். காணத்தவறாதீர்கள்.